DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **S.C.No.118/2025**
Prosecution Witness P.W.21

Name : **திரு.Dr.ராகுல்**
Caste:

Father's Name :**திரு.**
Calling :

Village:
Religion :

Taluk :
Age:

எதிரிகள் 1, 4 ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்

**நாள்: 06.04.2026**

(சாட்சி காணொளி காட்சி மூலம் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தனலட்சுமி ஸ்ரீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பெரம்பலூரில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன் கடந்த 17.11.2024–ம் தேதியன்று தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் போதகராக அலுவலில் இருந்தபோது உத்தமபாளையம் காவல் நிலைய குற்ற எண். 351/2024 வழக்கில் சம்பந்தப்பட்ட 38 வயது மதிக்கத்தக்க முத்துக்குமரன் என்பவரது உடற்கூறாய்விற்காக வேண்டுகோள் விண்ணப்பத்துடன் தலைமை காவலர் 2234 தியாகமுத்து என்பவரது வேண்டுகோள் கடிதம் பெறப்பட்டு பிரேதத்தில் காணப்பட்டுள்ள அங்க, மச்ச அடையாளங்களை சரிபார்த்து பிரேத பரிசோதனையை அன்றைய தினம் பிற்பகல் 2.35 மணிக்கு தொடங்கினேன். அப்பொழுது அந்த உடலில் மரண விரைப்பானது உடல் முழுவதும் காணப்பட்டது.

2. அப்போது அந்த உடலானது மிதமான போஷாக்குடன் காணப்பட்டது. அந்த உடலில் இருந்த துணியானது ரத்தக்கரை படிந்த நிலையில் இருந்தது. அந்த உடுப்பானது பல்வேறு இடங்களில் கிழிந்த நிலையில் காணப்பட்டது. உடலில் கை மற்றும் கால், விரல் நகங்கள் வெளிறிய நிலையில் காணப்பட்டது.

**உடலில் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு**

அட்டவணையில் காயங்களின் விபரங்கள் மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் தமிழாக்கம் அட்டவணையில் பின்வருமாறு குறிப்பிடுகிறேன்.

| காயம் எண் | Injury ஆங்கிலத்தில் அது பற்றிய விளக்கம் | தமிழில் அது பற்றிய விளக்கம் |
|---|---|---|
| 1 | A Cut injury with flap of size 12x1x2cm with flap of 3cm directed downwards is noted below left car. | 12x1x2cm ஒரு வெட்டுக்காயம் இடது காதில் கீழ்புறத்தில் உள்நோக்கியும், கீழ்நோக்கியும் காணப்பட்டது. ஒரு வெட்டுக்காயம் இடது காதின் கீழ் புறத்தில் நுண் நோக்கியும் கீழ்நோக்கியும் காணப்பட்டிருந்தது. அந்த வெட்டு காயம் 3.00 சென்டிமீட்டர் அளவிலான தசை மடிப்பு இருந்தது. |
| 2 | A cut injury of size 3x1x1cm noted 2cm below left eye. | 3x1x1cm இடது கண்ணிற்கு கீழே 2.00 சென்டிமீட்டர் கீழே வெட்டுக்காயம் காணப்பட்டிருந்தது. |
| 3 | 4cm above injury no2, a cut injury of size 4x 1xBone deep cm is noted in occipital region. | காயம் எண் 2 லிருந்து 4 சென்டிமீட்டர் மேலே எழும்பாலம் வரையிலான காயம் 4 x 1 cm |

| | | |
|---|---|---|
| | | ஆக்ஸிபிட்டல் பகுதியில் காணப்பட்டது. |
| 4 | A Cut injury with flap of size 6x2x1cm with flap of 3cm with beveling in lower margin is noted left temporal region. | 6x2x1cm ஒரு வெட்டு காயம் இடது டெம்போரல் பகுதியில் காணப்பட்டது. அதன் கீழ் விழும்பானது சாய்ந்த நிலையில் இருந்தது. மேலும் 3.00 சென்டிமீட்டர் அளவிலான தசை மடல் காணப்பட்டது. |
| 5 | A cut injury of size 3x1x1cm noted in back of left shoulder. | 3x1x1cm ஒரு வெட்டுக்காயம் இடது தோள்பட்டையின் பின்புறத்தில் காணப்பட்டது. |
| 6 | A vertical cut injury of size 8x1x bone deep cm is noted in of right parieto occipital region where oblique cut injury of size 7x1x bone deep em is intersecting at posterior end. | 8 x 1 x cm எலும்பு ஆழம் வரையிலான செங்குத்தான ஒரு வெட்டு காயம், வலது பிரோட்டோ ஆக்ஸிபிட்டல் பகுதியில் காணப்பட்டது. இதன் கீழ் பகுதியில் 7 x 1 x எலும்பு ஆழம் வரையிலான சாய்வான ஒரு வெட்டுக்காயம் இதன் கீழ் பகுதியை வெட்டி இருந்தது. |
| 7 | A Heavy cut injury of size 13x2xbone deep with beveling at lower margin is noted in right side forehead. | 13x2x வரையிலான ஒரு கனமான ஒரு வெட்டு காயம் வலது புற முன் மண்டையில் காணப்பட்டது. அதன் கீழ் விழும்பானது சாய்ந்த நிலையில் இருந்தது. |

| | | |
|---|---|---|
| 8 | An obliquely placed cut injury of size 10x1.5xbonedeep noted 2cm below injury no7 near the borders of right side lower jaw. | 10x1.5x எலும்பு ஆழம் வரையிலான ஒரு சாய்வான வெட்டுக்காயம் மேலே கூறப்பட்டிருந்த காயத்திலிருந்து ரெண்டு சென்டிமீட்டர் கீழே காணப்பட்டிருந்தது. |
| 9 | An obliquely placed cut injury of size 14x1.5xbonedeep noted 0.5cm below injury nos along the borders of right lower jaw also cuts right ear. | 14x1.5x சாய்வான ஒரு வெட்டுக்காயம் மேலே கூறப்பட்டிருந்த காயத்திலிருந்து 0.5 சென்டிமீட்டர் கீழே காணப்பட்டிருந்தது இந்த காயுமானது வலது காதையும் வெட்டி இருந்தது. |
| 10 | A horizontal cut injury of size 6.5x2x1cm with beveling in lower margin towards upper margin is noted near tip of front side of right shoulder. | 6.5x2x1cm ஒரு கிடை மட்ட வெட்டு காயம் வலது தோள்பட்டையின் முன்புறத்தில் காணப்பட்டிருந்தது. இதன் கீழ் விளிம்பானது சாய்வான நிலையில் இருந்தது. |
| 11 | Linear scratch abrasions of size 8 and 10cm noted in its outer aspect and middle of right side<br>chest. | 8 மற்றும் 10 சென்டிமீட்டர் நீளத்திலான ஒரு சிராய்ப்பு காயம் வலது பக்க நெஞ்சின் வெளிப்பகுதியிலும் நடுப்பகுதியிலும் காணப்பட்டிருந்தது. |
| 12 | Multiple small linear scratch abrasions noted in right side arm and right side chest. | வலது புற கை மற்றும் வலது புற மார்பு பகுதியில் சிறு சிறு சிறாய்ப்பு |

| | | |
|---|---|---|
| | | காயங்கள் காணப்பட்டிருந்தது. |
| 13 | Oblique heavy cut injury with two ends noted in its outer aspect of size 11x3.5xbone deep with underlying bone fracture is noted in back of right hand. | 11x3.5x எலும்பாலம் வரையிலான ஒரு கனமான சாய்வான வெட்டு காயம் வலது கையின் பின்புறத்தில் காணப்பட்டிருந்தது. இந்த காயத்தில் இரண்டு முனைகள் இருந்தது. இந்த காயத்தின் அடியில் இருந்த எலும்பானது எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. |
| 14 | Cut injury of size 1.5x2xbonedeep and 2x2xbone deep in continuity with flaps in lower margin with underlying bone fracture is noted in back of right 2nd and 3rd fingers. | 1.5x2x cm எலும்பு ஆழம் வரையிலான ஒரு வெட்டு காயம் அதன் தொடர்ச்சியாக 2 x 2 எலும்பு ஆழம் வரையிலான ஒரு வெட்டுக்காயம் இரண்டு மற்றும் மூன்றாவது விரல்களில் காணப்பட்டது. அந்த விரல்களில் உள்ள எலும்புகள் முறிந்த நிலையில் காணப்பட்டது. |
| 15 | Oblique stab injury of size 5x2x abdominal cavity with abdominal contents out through the injury is noted in outer aspect of right upper abdomen with sharp ends and clear margins. | 5x2x cm வயிற்று கூடு வரை உள்ள ஆழத்தில் ஆன ஒரு சாய்வான ஒரு குத்து காயம் வயிற்றின் மேல் பகுதியில் வெளிப்பகுதியில் காணப்பட்டிருந்தது. அந்த காலத்தில் இருந்து வயிற்றில் இருந்த சிறுகுடல் பகுதியின் சற்று வெளியே |

| | | |
|---|---|---|
| | | காணப்பட்டிருந்தது. அதன் விளிம்புகள் சீராக இருந்தது. |
| 16 | Cut injury of size 2to 2.5cmx 1xbone deep in continuity is noted in front of left 2nd and 3rd finger | இடதுபுற கையின் இரண்டாவது மற்றும் மூன்றாவது விரலில் முன் பகுதியில் 2 லிருந்து 2.5 சென்டிமீட்டர் நீளத்திலும் 1 சென்டிமீட்டர் அகலத்திலும் எலும்பு ஆழம் வரையிலான ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டிருந்தது. |
| 17 | Oblique cut injury of size 4x1x1cm is noted in back of left wrist with flap of 2cm in lower margin. | 4x1x1cm சாய்வான ஒரு வெட்டுக்காயம் இடது மணிக்கட்டின் பின்பகுதியில் காணப்பட்டிருந்தது. இதன் கீழ் விளிம்பில் 2 சென்டிமீட்டர் அளவிலான தசைமடல் காணப்பட்டிருந்தது. |
| 18 | Cut injury of size 13.5x2xbone deep with a flap of 8cm in lower margin is noted in front of lower end of left forearm. | 13.5x2x எலும்பாலம் வரையிலான வெட்டு காயம் இடது முன்னங்கையில் கீழ் பகுதியின் முன் பகுதியில் காணப்பட்டிருந்தது. இதன் கீழ் விழும்பில் 8.00 சென்டிமீட்டர் அளவிலான ஒரு தசை மடல் காணப்பட்டிருந்தது. |
| 19 | Cut injury of size 9.5x1.5x2cm with a flap of 5cm noted 1 cm below above injury. | 9.5x1.5x2cm ஒரு வெட்டு காயம் மேலே கூறப்பட்டிருந்த காயத்தில் |

| | | |
|---|---|---|
| | | இருந்து 1.00 சென்டிமீட்டர் கீழே காணப்பட்டிருந்தது. இந்த காயத்தில் 5.00 சென்டிமீட்டர் அளவிலான ஒரு தசை மடல் இருந்தது. |
| 20 | Vertical cut injury of size 6x2.5bone deep noted in outer aspect of upper end of left forearm. | 6 x2.5 செ.மீ. எலும்பு ஆழம் வரையிலான ஒரு செங்குத்தான வெட்டுக்காயம் இடது முன்னங்கையின் மேல் பகுதியில் வெளிப் பகுதியில் காணப்பட்டிருந்தது. |
| 21 | Horizontal heavy cut injury of size 10x3x3cm with tail at inner aspect is noted in left upper chest with greater depth in lateral end. | 10x3x3 cm ஒரு கிடை மட்டமான வெட்டுக்காயம் இடது புறம் மேல் நெஞ்சில் வால் பகுதியுடன் காணப்பட்டிருந்தது. இதன் வெளிப்பகுதி மிகவும் ஆழமாக இருந்தது. |
| 22 | Horizontal cut injury of size 6x5x0.5cm noted just below chin in neck. | 6x5x0.5cm ஒரு கிடை மட்டமான வெட்டு காயம் கழுத்தின் தாடைப்பகுதியில் காணப்பட்டிருந்தது. |
| 23 | Horizontal heavy cut injury with 4 ends in right and left side with 2 tails in left side measuring to 16 cm x 6 x bone deep cutting underlying esophagus, trachea, blood vessels and | 16 cm x 6 x எலும்பு ஆழம்வரையிலான ஒரு வெட்டுக்காயம் இருந்தது. அந்த காயத்தில் வலது புறத்தில் நான்கு |

| | | |
|---|---|---|
| | nerves. | முனைகளும், இடதுபுறத்தில் இரண்டு வால் பகுதி உடன் காணப்பட்டு இருந்தது. இதன் அடியில் இருந்த உணவுக் குழாய், சுவாசக் குழாய், ரத்த நாளங்கள் ஆகியவை வெட்டுப்பட்டு இருந்தது. |
| 24 | 2 cm lateral to above injury, 3 x 1 x 2 cm cut injury with 1 cm tail noted in its lateral end. | மேலே கூறப்பட்டிருந்த காயத்தில் இருந்து 2 சென்டிமீட்டர் வெளிப்புறத்தில் 3 x 1 x 2 cm ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அதன் வெளிப்புறப் பகுதியில் 1.00 சென்டிமீட்டர் அளவிலான ஒரு வால் பகுதி காணப்பட்டிருந்தது. |
| 25 | Laceration of size 4 x 0.5 x 0.5 cm noted in left side upper lip and in right side lower lip with fracture of upper central incisor. | 4 x 0.5 x 0.5 cm ஒரு சிதைந்த காயம் மேல் உதட்டின் இடது பகுதியில் வலது பகுதியில் கீழ் உதட்டிலும் காணப்பட்டிருந்தது. இதன் அடியில் இருந்த அப்பர் சென்ட்ரல் இன்ஸிஸ்டார் என்ற பல் முறிந்து காணப்பட்டு இருந்தது. மேலே கண்ட காயங்களின் விளிம்புகள் மற்றும் முனைகள் சீராக இருந்தது. |

தலையை கூராய்வு செய்ததில் மேலே கூறப்பட்டிருந்த காயங்களை சுற்றி ரத்தக் கசிவு ஏற்பட்டு இருந்தது. மூளையில் பரவலாக சப்டியூல் மற்றும் சப் அரக்கனாய்டு ஹெமரேஜ் காணப்பட்டிருந்தது. வயிறு மற்றும் நெஞ்சுப் பகுதியை

கூறாய்வு செய்ததில் இரண்டு பகுதியிலும் 100 மில்லி அளவில் ஆன இரத்தம் திரவ வடிவில் காணப்பட்டிருந்தது. மேலும் வயிற்றுப் பகுதியில் வலது சிறுநீரகத்தின் மேல் பகுதியில் உள்ள திசுக்களில் ரத்தம் கசிந்த நிலையில் காணப்பட்டிருந்தது. மேலே குறிப்பிட்டு இருந்த காயம் எண். 15 க்கு அடியில் இருந்த திசுக்களிலும் ரத்தம் கசிந்த நிலையில் காணப்பட்டிருந்தது.

**<u>இதர கண்டறிவுகள்</u>**

1. இருதயம் சீராக இருந்தது, அதன் ரத்த நாளங்கள் சீராக இருந்தது. நாவடி எலும்பு சீராக இருந்தது. வயிற்றுப் பகுதியில் 150 கிராம் அளவிலான பாதி செரிமானமான உணவுடன் மஞ்சள் நிறத்தில் ஆன திரவமும் காணப்பட்டிருந்தது, இதில் எவ்வித நெடியும் காணப்படவில்லை. அதன் மென்சவ்வானது வெளிறிய நிலையில் காணப்பட்டிருந்தது. நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், மற்றும் சிறுநீரகம் சீராக இருந்தது அதன் குறுக்கு வெட்டு தோற்றம் வெளிறிய நிலையில் காணப்பட்டது.

2. சிறுகுடலில் 50 மில்லி அளவிலான பச்சை, மஞ்சள் நிறத்திலான ஒரு திரவம் காணப்பட்டிருந்தது, இதில் எவ்வித நெடியும் இல்லை. அதன் மென்சவ்வானது வெளிறிய நிலையில் காணப்பட்டிருந்தது. மூளை மேலே குறிப்பிட்டு இருப்பது போல காயங்கள் காணப்பட்டிருந்தது. விஸ்ரா மற்றும் ரத்த மாதிரிகள் சேகரம் செய்யப்பட்டு பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ரசாயன பகுப்பாய்வின் முடிவுகள் கிடைக்கப்பெற்று எனது இறுதி கருத்துரையாக மேலே கண்ட நபர் அவர் உடலில் ஏற்பட்டுள்ள பல்வேறு வெட்டுக் காயங்களினால் இறந்திருப்பார் என்றும், அவரது விஸ்ராவில் மது இருந்ததற்கான ஆய்வறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் அவரது மரணமானது பிணக்கூராய்விற்கு 12 ல் இருந்து 24 மணி நேரத்திற்கு முன்பு இறந்திருக்கலாம் என்றும் இறுதிக்கருத்துறை வழங்கினேன்.

3. நீதிமன்றத்தில் காண்பிக்கக்கூடிய சா.பொ.8 கத்தியால் இறந்தவர் உடலில் ஏற்பட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வாய்ப்புள்ளது.

ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார். நான் வழங்கிய பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ. 24. விஸ்ரா அறிக்கை அ.த.சா.ஆ.25, இறுதி கருத்துறை அ.த.சா.ஆ.26, பயாலஜி அறிக்கை அ.த.சா.ஆ.27, சிராலஜி அறிக்கை அ.த.சா.ஆ.28, பிரேத பரிசோதனைக்கு முன்பு இறந்து போன முத்துக்குமரன் அவரது பிரேதத்தை சவக்கடங்கில் வைப்பதற்கு பரிந்துரை செய்து வழங்கிய விபத்து பதிவேடு நகல் அ.த.சா.ஆ 29.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. என்னிடம் தற்போது காண்பிக்கக்கூடிய கத்தியை நான் தற்போது தான் முதல்முறையாக பார்க்கிறேன் என்றால் சரியாக எனக்கு நினைவில் இல்லை. வழக்கின் பொருளை பற்றியோ வழக்கின் வரலாறு பற்றியோ ஆய்வாளர் என்னிடம் விளக்க வில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமான விவரங்களை ஆய்வாளர் என்னை எங்கு வைத்து எந்த தேதியில் விசாரணை செய்தார் என்ற விவரத்தை நான் ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் தேதி எனக்கு நினைவில்லை.

2. இந்த வழக்கில் எத்தனை முறை ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரியாக எனக்கு நினைவில்லை. வழக்கில் ஆய்வாளர் என்னை முறையாக விசாரணை செய்திருந்தால் எத்தனை மணிக்கு எத்தனை முறை என்னை விசாரணை செய்தார் என்ற விபரத்தை என்னால் குறிப்பிட்டு சொல்லியிருக்க இயலும் என்றால் சரியல்ல. கழுத்து மற்றும் வயிற்றால் ஏற்பட்டிருக்கும் வெட்டு காயங்களினால் மட்டுமே அவர் உயிர் இழப்பு ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் அவருக்கு உடலில் ஏற்பட்டுள்ள பல்வேறு வெட்டு காயங்களின் காரணத்தினால் அவர் இறப்பு ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன். ஆய்வாளர் விசாரணையில் வெளிப்புற காயங்கள் எத்தனை இருந்தது என்று குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும் அவ்வாறு கருத்துரை எதுவும் வழங்கவில்லை என்றால் சரியல்ல. வெளிப்புறக் காயங்கள் எங்கிருந்து ஏற்பட்டது அதன் நீல அகலங்கள் ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. உண்மையாக என்னால் பிணக்கூராய்வு செய்யப்பட்டிருந்தால் வெளிப்புற காயங்கள் எத்தனை என்று தெள்ளத் தெளிவாக சொல்லி இருப்பேன் என்றால் எத்தனை காயங்கள் என்று எனது பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். அன்றைய தினம் நான் பணியில் இருந்தேன் என்ற ஆவணங்கள் எதையும் போலீசார் என்னை விசாரணை செய்யும் போது நான் கொடுக்கவில்லை என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை, ஆனால் நான் அன்றைய தினம் பணியில் இருந்தேன்.

4. நான் ஆவணங்கள் எதுவும் ஒப்படைக்காத காரணத்தினால் நான் அன்றைய தினம் பணியில் இல்லை என்றால் சரியல்ல. ஒரு நபர் மதுபோதையில் இருக்கும்போது அவர் தற்காப்புக்காக தாக்கும்போது தடுப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, அவர் எவ்வளவு மது அருந்தி உள்ளார் என்பதை பொறுத்து அது மாறுபடும். விஸ்ரா அறிக்கையில் பார்க்கும்போது அவரது வயிற்றில் 376 மில்லி அளவிற்கு மது இருந்ததற்காகவும், குடலில் 115 மில்லி அளவிற்கு மது இருந்ததற்கான அறிகுறியும், கல்லீரலில் 138 மில்லி கிராம் அளவிற்கான மது இருந்ததற்கான அறிகுறியும் இருந்துள்ள பட்சத்தில் அவர் மித மிஞ்சிய மது போதையில் இருந்துள்ளார் என்றால் சரியல்ல.

5. தற்போது உள்ள மதுவின் அளவை வைத்துக் கூட அவரால் தாக்குதலில் இருந்து தடுத்திருக்க முடியும். ஒரு நபர் இந்த மது அளவை பொருத்தமட்டில் அவர் சுயநினைவை இழக்கும் அளவிற்கு மது போதையில் இருந்து உள்ளார் என்றால் என்றால் சரியல்ல. அவர் வயிற்றில் இருந்த அளவைவிட அவர் மற்ற உடல் பாகங்களில் உள்ள மதுவின் அளவு கம்மியாக இருந்த காரணத்தினால் அவர் மித மிஞ்சிய மதுபோதையில் இருந்தார் என்று குறிப்பிட முடியாது.

6. விஸ்ரா அறிக்கை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல, எனது பார்வைக்கு விஸ்ரா அறிக்கை வந்தது அவ்வாறு எனது பார்வைக்கு விஸ்ரா அறிக்கை வந்திருந்தால் எவ்வளவு மது இருந்தது என்ற விபரத்தை நான் தெள்ளத் தெளிவாக ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் ஆய்வாளர் அது குறித்து என்னை விசாரணை செய்தாரா என்று எனக்கு நினைவில் இல்லை. நான் ஆய்வாளர் விசாரணையில் அது பற்றி குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை இறந்தவரது உடல் உறுப்புகள் என்னென்ன நான் ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பி வைத்தேன் என்ற விவரத்தையும் நான் ஆய்வாளர் விசாரணையிலும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் பகுப்பாய்வு அறிக்கையில் என்னென்ன உள்ளுறுப்புகள் அனுப்பி வைக்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிட்டிருக்கும்.

7. ஆய்வாளர் விசாரணையில் அது பற்றி நான் சொல்லவில்லை என்றால் சரிதான். உடல் கூறாய்வு என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்தால் என்னென்ன உடல் உறுப்புகள் எடுத்து அனுப்பப்பட்டது என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் தெளிவாக குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கமாக என்னென்ன உடல் உறுப்புகள் அனுப்பி வைக்கப்படுமோ அதை அனுப்பி வைத்துள்ளேன். எனது பிரத பரிசோதனையில் இறந்தவர் உடலில் 33 சென்டிமீட்டர் நீளம் குத்து காயங்கள் இல்லை என்றால் அவ்வாறான காயங்கள் எதுவும் இருந்ததாக நான் குறிப்பிடவில்லை.

8. என்னிடம் காட்டக்கூடிய இரும்பு கத்தியின் நீளம் 33 சென்டிமீட்டர் என்னும் பட்சத்தில் இந்த கத்தியால் மேற்கண்ட காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. ஒரு நபர் கொலை வெறி தாக்குதலுடன் குத்தும்போது அந்த கத்தியின் கூர்முனை முழுவதும் அவரது உடலில் இறங்குவதற்கு வாய்ப்பு உண்டு என்றால் அந்த நபர் எவ்வளவு விசைத்திறன் கொண்டு குத்தி இருந்தாரோ அதை பொறுத்து அது அமையும். கொலைவெறி தாக்குதலுடன் குத்தும் நபர் முழுமையான பலம் கொண்டு குத்தும் பொழுது

கத்தியின் முழு ஆழம் அவரது உடலில் இறங்கி இருக்கும் என்றால் உடலில் எந்த பகுதியில் அந்த கத்தியை கொண்டு குத்தி இருக்கிறாரோ அதை பொறுத்து அதன் ஆழம் அமையும்.

9. வயிற்றுப் பகுதியில் குத்தி இருக்கும் பட்சத்தில் அந்த கத்தியின் முழு ஆழம் வயிற்று பகுதியில் இறங்கி இருக்கும் என்றும், வயிற்று பகுதியில் அந்தக் கத்தியின் கைப்பிடியின் அச்சும் அதில் பதிந்திருக்கும் என்றால் பொதுவாக அவ்வாறு குத்தி இருந்தால் அவ்வாறு ஏற்படலாம் ஆனால் அவ்வாறான காயங்கள் எதுவும் இறந்தவர் உடலில் இல்லை. எனவே இந்த நீதிமன்றத்தில் காண்பிக்க கூடிய கத்தியால் மேற்கண்ட தாக்குதல் ஏற்படவில்லை என்றால் சரியல்ல, வயிற்றுப் பகுதியில் முழுவதும் குத்தப்பட்டிருந்தால் வயிற்றின் உள்ளுறுப்புகள் அனைத்தும் சேதமாகி இருக்கும் அவ்வாறான காயங்கள் எதுவும் இறந்தவர் உடலில் காணப்படவில்லை.

10. வெட்டு காயங்கள் அருவாளாலும் வேல் கம்பு மற்றும் ஈட்டி ஆளும் இறந்தவர் உடலில் தாக்குதல் நடத்தினாலும் அது போன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் கூர்மையான ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்பு உண்டு. இறந்தவர் உடலில் காணப்பட்டுள்ள 25 காயங்கள் ஒரே நபரால் தாக்கி ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றும் பல்வேறு ஆயுதங்களாலும், பல்வேறு நபர்களாலும் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு என்றால் கூர்மையான ஆயுதங்களால் ஒரு நபராலோ அல்லது பல்வேறு நபர்களாலோ ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு.

11. எனது அறிக்கையின் படி இறந்து போனவரின் இறப்பு 16.11.2024 ம் தேதியன்று மதியம் 2:30 மணிக்கு நடந்திருக்குமா என்றால் 17.11.2024 ம் தேதியன்று எனது பிரேத பரிசோதனையை மதியம் 2.35 மணிக்கு தொடங்கினேன், எனது பிரேத பரிசோதனை அறிக்கையின் படி 12 லிருந்து 24 மணி நேரத்திற்கு முன்பு ஏற்பட்டிருக்கும் என்று நான் கருத்துறை வழங்கி உள்ளேன். ஒரு இறந்தவரின் உடலில் உள்ள உணவுப் பொருட்களை வைத்து அவர் எப்போது இறந்தார் என்ற விபரத்தை தெள்ளத்தெளிவாக சொல்ல முடியும்

என்றால் அவ்வாறு குறிப்பிட்டுக் கூற முடியாது. அவர் என்ன உணவை அருந்திருந்தார் அதனுடன் என்ன அருந்திருந்தார் என்ற விபரத்தையும் பார்த்து மட்டுமே சொல்ல முடியும்.

12. இறந்தவர் மித மிஞ்சிய மதுபோதையில் இருந்ததால் அவர் மது குடித்துக் கொண்டிருக்கும்போதே இறந்திருக்க வாய்ப்பு உண்டா என்றால் அவ்வாறு குறிப்பிட்டு கூற முடியாது. அவரது உடலில் அதிகமான ரத்தப்போக்கு இருந்த காரணத்தினால்தான் அவரது உடலில் மது வாடை இல்லை என்றால் அது எல்லா வழக்குகளில் மது வாடை கண்டறிய இயலாது அது இறந்து போன நபர் அருந்தியுள்ள உணவு ஆகியவற்றை பொருத்து அமையும்.

13. என்னிடம் காட்டக்கூடிய கத்தியானது மிகவும் கடினமானது என்றும், குத்து மற்றும் வெட்டு காயங்கள் மிகவும் ஆழமாக படிந்து அவரது உடலில் முழுவதுமாக இறங்கி இருக்கும் என்றால் இறந்தவர் உடலில் ஏற்பட்டுள்ள காயங்கள் சில ஆழமான வெட்டு காயங்கள் காணப்படுகிறது, மேலும் அடியில் உள்ள எலும்புகளும் முறிவு ஏற்பட்டுள்ளதை காண முடிகிறது. எனவே கனமான கத்தியை கொண்டு இந்த தாக்குதல் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு கனமான கத்தியை கொண்டு தாக்கும்போது கத்தியின் முனை மழுங்குவதற்கு வாய்ப்பில்லை என்றும், கத்தியும் வளைவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

14. திரும்பத் திரும்ப ஒரே கத்தியை வைத்து தாக்குதல் நடத்தும்போது அதன் கூர்முனை மழுங்குவதற்கும் கத்தியின் முனை வளைவதற்கு வாய்ப்பு உள்ளது. கணினி வாயிலாக கத்தியை பார்க்கும்போது அது பற்றிய விவரங்களை என்னால் கருத்துரை சொல்ல முடியாது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் காண்பிக்கக்கூடிய கத்தியின் முனை லேசாக மழுங்கி உள்ளது என்றும் கத்தி வளைந்துள்ளது என்றும், எனவே இந்த கத்தி வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. திரும்பத், திரும்ப இந்த கத்தி தாக்குதலுக்கு பயன்படுத்தும்போது அதன் முனைகள் கூர்மை இழப்பதற்கு வாய்ப்பு உண்டு. கத்தி வளைவதற்கு வாய்ப்பு உண்டு.

15. கூர்முனை மழுங்கிய ஆயுதத்தால் தாக்குதல் நடந்ததாக காயம் எதுவும் நான் எனது அறிக்கையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் காயங்களின் விளிம்புகள் சீராக இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன். எனவே இந்த கத்தியால் அந்த காயங்கள் ஏற்படவில்லை என்றும், பல்வேறு நபர்களால் பல்வேறு ஆயுதங்களால் இந்த காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க வழக்குக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.06 17:41:15 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.